REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: கார்த்திகை 26உ திங்கள் (12—12—55) ★ ★ வெளியீடு: கார்த்திகை 27உ செவ்வாய் (13—12—55) [இதழ் 154

மீண்டும் 'கோரம்' இல்லா அகோரம்

புதுடில்லி, டிச. 10—

இன்று காலை 11 மணிக்கு, மக்கள் சபைக் கூட்டம் துவங்கிய போது சபையில் 'கோரம்' இல்லாததால், உறுப்பினர்களை சபைக்குள் அழைக்க மணி அடிக்கவேண்டி வந்திருக்கிறது.

உதவி சபைத் தலைவர் அனந்தசயனம் சரியாக 11 மணிக்கு சபைக்கு வந்தார். ஆனால், நடவடிக்கைகளைத் துவக்குவதற்குத் தேவையான 'கோரம்' இல்லை என்று செயலாளர் எம். என். கௌல் சுட்டிக் காட்டினார்.

'என்ன? நம் கடிகாரங்களில் ஏதேனும் கோளாறு?' என்று

(4-ம் பக்கம் பார்க்க)

சர்க்கார் மீது வர்த்தகர் சங்கம் பாய்ச்சல்!

வியாபாரத் துறையில் சர்க்கார் ஈடுபடுவதற்கு எதிர்ப்பு

அவசரப்பட்டு நடவடிக்கை கூடாதெனக் கோரிக்கை

புதுடில்லி, டிச. 10—

வர்த்தகத் துறையை சர்க்கார் மேற்கொள்ளுவதற்கு, இந்திய வர்த்தகத் தொழில் கழகங்களின் கூட்டுச் சங்கம் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறது.

வேலை நிலை குறித்துப் பெரும் கவலைக்குள்ளாகும் இந்த நேரத்தில், வர்த்தகத் துறையில் சர்க்கார் ஈடுபடுவது, எண்ணற்ற சிறு சிறு வியாபாரிகளை வேலையில்லாக் கொடுமைக்கு ஆளாக்குவதாகும்; எனவே, சர்க்கார் இதுகுறித்து அவசர நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளக் கூடாது என்று எச்சரிக்க விரும்புவதாக அந்த கூட்டுச் சங்கக் கூட்டத்தில், பலர் சர்க்கார் மீது பாய்ந்திருக்கின்றனர்.

இந்தியாவிலும், இதர நாடுகளிலும், வர்த்தகத் துறையில் சர்க்கார் நுழைவதினால், மக்களுக்குக் குறைந்த விலையில் பொருள்கள் கிடைக்கவும் இல்லை; பொருள்கள் பட்டுவாடாவும் சிறப்புற்றிருக்கவில்லை என்பதை கடந்த கால அனுபவம் நன்கு சொல்கிறது என்றும் அந்தக் கூட்டத்தில் பேசப்பட்டதாம்.

திரு-கொச்சி முஸ்லீம் லீக்

அரசியல் கட்சியாக உருவாகும்

கொச்சி, டிச 11—

திரு-கொச்சி முஸ்லீம் லீக் இயக்கத்தை ஒரு நல்ல அரசியல் கட்சியாகத் திருத்தி அமைக்கத் திட்டமிட்டிருப்பதாக லீகர் ஒருவர் கூறியிருக்கிறார்.

தேசிய வாழ்வில் முஸ்லீம்கள் ஒரு பெரும் பங்கு பெறவேண்டும் என்பதும் நோக்கங்களில் ஒன்று என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

திரு-கொச்சியில் எட்டு இலட்சம் முஸ்லீம்கள் வசிக்கின்றனர்.

டி. டி. கிருஷ்ணமாச்சாரியின் நெருக்கடி நிலை!

'அம்பர் சர்க்கா'வுக்கு ஆதரவு தருவதில் காங்கிரசாரிடை பெரும் பிளவு?

புதுடில்லி, டிச. 10—

'துணி உற்பத்தி இலாகாவை வேறு எந்த மந்திரியேனும் மேற்பார்த்துக் கொள்வதானாலும் நான் கவலைப்படமாட்டேன்' என்று கூறுகிற நெருக்கடி நிலை, இந்தியப் பேரரசின் மத்திய அமைச்சரவையில் தொழில் வர்த்தக இலாகா மந்திரியாயிருக்கும் டி. டி. கிருஷ்ணமாச்சாரிக்கு ஏற்பட்டிருக்கிறது.

'காந்தீயக் கோட்பாடுகளுக்கு இணங்க, கிராமத் தொழில்களுக்கு சர்க்கார் போதுமான ஆதரவு தருவதில்லை' என்று, கிராமத் தொழில்களுக்கான மக்கள் சபை காங்கிரஸ் கட்சி உறுப்பினர் குழுக் கூட்டத்தில் சிலர் பேசியிருக்கின்றனர்.

"இரண்டாம் திட்டக் காலத்தில், துணி உற்பத்தித் தேவையைப் பூர்த்தி செய்ய 'அம்பர் சர்க்கா' உதவ முடியாது," என்று, மந்திரி டி. டி. கே. வாதிடுவதாயும், இதனால், குழுக் கூட்டத்தில், காரசாரமான வாக்குவாதம் நடைபெற்றதாயும் தெரிய வருகிறது.

மேலும் டி டி. கே., 'அம்பர் சர்க்கா'வில் உற்பத்தி செய்யப்படும் நூல், கைத்தறிக்கு உகந்ததாயிருக்குமெனக் கூறுவதற்கில்லை என்றும் கூறியிருக்கிறார்.

அத்துடன், இந்தக் காரணங்களால், ஆலைகளுக்கு, நூற்புக் கதிர்களை அதிகரிக்க அனுமதி வழங்க வேண்டியது அவசியம் என வாதிட்டிருக்கிறார்.

கிராமத் தொழில் இலாகா பொறுப்பு வகிக்கும் மந்திரி கே. சி. ரெட்டி, 25,00,000 'அம்பர் சர்க்கா'க்களை, இரண்டாம் திட்ட காலத்தில் அமைப்பதற்காக அகில இந்திய கிராமத் தொழில் போர்டு, இந்திய சர்க்காரிடம் ரூ! 25 கோடி பெறுமான திட்டம் ஒன்றைத் தாக்கல் செய்திருப்பதாகக் கூறியிருக்கிறாராம்.

மேலும், நிதி மந்திரி தேஷ்முக் கூட்டத்தில் பேசுகையில், "'அம்பர் சர்க்கா'வுக்கு, மானிய உதவி தர வேண்டும் என்று கூறினால், இதற்காக, இரண்டாம் திட்ட காலத்தில் சர்க்கார் ரூ. 80 கோடி செலவிட வேண்டிவரும்; இவ்வளவு பெரிய தொகை செலவிட நாட்டு நிலை இடம் தருமா என்பதையும் உறுப்பினர்கள் எண்ணிப் பார்த்தாக வேண்டும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

திட்ட மந்திரி குல்ஜாரிலால் நந்தா பேசுகையில், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க, 'அம்பர் சர்க்கா' பெரிதும் உதவும் என்று தான் நம்புவதாயும், அதற்காகவேனும் 'அம்பர் சர்க்கா'வை ஊக்குவிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேறு ஏதேனும் திட்டங்கள் இருப்பின் அவற்றைத் தாக்கல் செய்யலாம் என்றும் திட்ட மந்திரியான அவர் வீராப்புப் பேசினாராம்.

உற்பத்தி மந்திரியான கே. சி. ரெட்டி, வேலையில்லாத் திண்டாட்டச் சிக்கலைத் தீர்க்கும் நோக்கிற்காகவேனும், 'அம்பர் சர்க்காவை' ஆதரிக்க வேண்டும் என்று பேசியிருக்கிறாராம்!

இப்படி 100 நிமிடங்களுக்கு

(மூன் கலம் பார்க்கவும்)

'கோவாவை விட்டு வெளியேறு!'

கட்ஜு முழக்குகிறார்

ஆக்ரா, டிச 10—

"இந்தியாவைவிட்டு பிரிட்டிஷாரும், பிரெஞ்சுக்காரரும் உரிய காலத்தில் கௌரவமாக வெளியேறிய உதாரணத்தைப் போர்ச்சுகீசியரும் பின்பற்றியாகவேண்டும்.

"கோவா பற்றிய போர்ச்சுகீசியரின் கொள்கை சிறுபிள்ளைத்தனமானது; அவர்கள் கொஞ்சம் முன்யோசனையுடன் நடந்து கொள்ளவேண்டும்," என்று, இந்தியப் பேரரசின் தற்காப்பிலாகா மந்திரி டாக்டர் கே என். கட்ஜு கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

விசால ஆந்திர அமைப்பு

'எவரையும் நிர்ப்பந்திக்கும் நோக்கமில்லை'

குண்டூர், டிச. 10—

"விசால ஆந்திரம் உடனடியாக அமைய வேண்டும் என்று காங்கிரஸ் செயற்குழு கருதுகிறது; என்றாலும், அந்தக் கருத்தை ஏற்குமாறு எவரையும் நிர்ப்பந்திக்கும் நோக்கம் எங்களுக்கு இல்லை. விசால ஆந்திரம் உடனடியாக அமைய வேண்டும் என்று, ஆந்திர மக்களும், தெலிங்கானா மக்களும் ஒரு சேர முடிவு செய்வதையே நான் விரும்புகிறேன்," என்று, ஆந்திரா 20-வது அரசியல் மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசுகையில் பிரதமர் பண்டித நேரு குறிப்பிட்டிருக்கிறார்.

'முயற்சி தோற்றால் பதவியைத் துறப்பேன்...'

டேவிட் மார்ஷல் அறிவிப்பு

லண்டன், டிச. 9—

"சிங்கப்பூருக்குச் சுயாட்சி பெறுவதற்காக நான் மேற்கொண்டுள்ள முயற்சி தோல்வியுறுமானால், நான் முதன் மந்திரி பதவியிலிருந்து விலகிவிடுவேன்; வேறு யாராவதுதான் சர்க்காரை நடத்த வேண்டும்," என்று, இங்கு வந்து சேர்ந்துள்ள டேவிட் மார்ஷல் தெரிவித்திருக்கிறார்.

"தங்கள் காலனிகளுக்கு விடுதலை வழங்க பிரிட்டிஷ் மக்களும், சர்க்காரும் தேதி நிர்ணயிக்க விரும்புவதில்லை என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால், சிங்கப்பூர் விஷயம் முடிவு செய்யப்பட வேண்டும்," என்றும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.

மத்திய சர்க்கார் அனுமதி

சர்க்காருக்குச் சொந்தமான நிலக்கரிச் சுரங்கங்களின் அபிவிருத்திக்காக சுமார் ரூ 1 கோடி செலவாகக்கூடிய 14 திட்டங்களுக்கு மத்திய சர்க்கார் இதுவரை அனுமதியளித்திருக்கின்றனர். இரண்டாவது ஐந்து ஆண்டுத் திட்ட காலத்தில், சுமார் ரூ 12-கோடி செலவாகக்கூடிய மேலும் 25 திட்டங்களை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

திண்டுக்கல்லில் நிவாரண நிதி வசூல்

புயல்,வெள்ள நிவாரணக் குழுத் தலைவர் டி. எம். எம். துரைராஜ் அவர்கள் தலைமையில் நகரப் பிரமுகர்கள் பி. என். கோவிந்தராசு, பி. சமதர்மம், ஒ. என். சுந்தரம் ஏ. எஸ் எஸ். சிவசூரியநாராயணன், எம். எஸ். அப்துல் சத்தார், ஒ சின்னசாமி, கே. கணேசன், நாகூர் பிச்சை, டி சாரங்கபாணி, நகர சபைத் துணைத் தலைவர் எம். எஸ். டி. பாலசுப்பிரமணியம் மற்றும் பலர் அடங்கிய பெரும் கூட்டம் ஒன்று இன்று இரவு 7-30 மணிக்குவசூல் வேலைகளைத் துவக்கி இரவு 9-30 மணிக்குள் ரூ 2,250 வசூல் செய்தது.

மற்றும் நகரப் பகுதிகளில் வசூல் செய்யப்பட்ட தொகை ரூ. 3,000. துணி வியாபாரிகள் சங்கச் சார்பாக 2,000 கெஜம் துணிகள் சேகரித்திருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. நிதி வசூல் குழுவினருடன் தோழர் பி. சமதர்மம் அவர்கள் வசூல் வேலைகளைத் தீவிரமாகக் கவனித்து வருகிறார். (ந-நி)

(5-ம் கலத்தின் தொடர்ச்சி.)

மேலாகக் கூட்டம் நடைபெற்றும்; முடிவேதும் காண இயலாத நிலையில் கூட்டம் முடிவுற்றிருக்கிறது.

கூட்டத்தில் மந்திரி கிருஷ்ணமாச்சாரியும், சில உறுப்பினர்களும் அனல் வீசும் வாசகங்களைப் பரிமாறிக்கொண்டனராம்.

கம்யூனிஸ்டுத் தலைவருக்கு முதலமைச்சர் தாக்கீது

கோலாலம்பூர், டிச. 11—

வரும் டிசம்பர் 30-ந் தேதிக்குள் பதில் கிடைக்காவிட்டால், தான் மலேயா கம்யூனிஸ்டுக் கட்சிப் பொதுச் செயலாளரான சின்-பெங் என்பாருடன் ஏற்பாடு செய்துள்ள சந்திப்பை ரத்து செய்துவிடுவதாக மலேயா முதன் மந்திரி தெங்கு அப்துல் ரஹ்மான் அறிவித்திருக்கிறார்.

முதன் மந்திரி வரும் ஜனவரி 2-ந் தேதியன்று லண்டன் செல்லவிருக்கிறார். அதை ஒட்டி, சின்-பெங்கைச் சந்திப்பதற்காகத் தனது லண்டன் பயணத்தை ஒத்திவைப்பதற்கில்லை என்றும், சின்-பெங்குடன் சந்திப்பை லண்டனிலிருந்து திரும்பும்வரை ஒத்தி வைக்கும் பிரச்சினையே எழாது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

***

தலைமைக் கழகச் செய்தி

புயலால் பாதிக்கப்பட்ட இடங்களில் பொதுச்செயலாளர் சுற்றுப்பயணம்

★

புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டப் பகுதிகளைப் பார்வையிடவும், நிலைமைகளை நேரில் கண்டறியவும், ஆங்காங்குள்ள கழகத் தோழர்களை நிவாரண வேலைகளில் ஈடுபடுத்தவும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 12—12—55, 13—12—55 ஆகிய இரு நாட்களிலும் அந்தப் பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்ய 11-12-55 மாலை புறப்பட்டுள்ளார்.

சுற்றுப்பயணத்தின்போது தஞ்சை மாவட்ட தி.மு.கழகச் செயலாளர் என். எஸ். இளங்கோ அவர்களும், பொதுக்குழு உறுப்பினர் தோழர் கண்ணதாசன் அவர்களும் உடன் செல்லுகிறார்கள்.

சுற்றுப்பயணத்தின்போது முக்கியமாக மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம், முத்துப்பேட்டை, அதிராம்பட்டினம், பட்டுக்கோட்டை, பேராவூரணி, அறந்தாங்கி, காரைக்குடி, பரமக்குடி, மேலூர் ஆகிய பகுதிகளைப் பார்வையிடுவார்கள்.

'அறிவகம்' 12-12-55. } —தி. மு. க. தலைமை நிலையம்

***

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 12—12—'55 திங்கள்

'மூட நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டதே மதம்'

பொதுவுடைமை அமைப்பில் மத நிலை பற்றி ரஷ்ய வானொலி

லண்டன், டிச. 9—

"மூட நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டதே மதம்; அது, சிறந்த மனித இயல்புகளை அழிக்கிறது; 'பகைவரிடத்திலும் அன்புகூருவாயாக' என்று கூறும் மதக் கொள்கை ஆபத்தானது; பகைவரை அகற்ற — அன்பு அல்ல—பகைமையே வேண்டும்,"

என்று, ரஷ்ய கலாச்சார இலாகாவைச் சேர்ந்த எம். பி. கொரிட்சின் என்பார், ரஷ்ய வானொலி மூலம் கூறியுள்ளாராம்.

மதம் புத்துயிர் பெறுவதைத் தடுப்பதற்கு முனைந்து பிரச்சாரம் செய்ய வேண்டுமென்றும், பொது வுடைமைத் தத்துவம் மதத்தைப் பகைக்கிறது என்றும் ரஷ்ய வானொலி அறிவித்துள்ளதாக இங்கு கூறப்படுகிறது.

"மதப் பிரச்சினையில் பொது வுடைமைத் தத்துவம் நடு நிலைமை வகிக்க இயலாது;

மனச்சாட்சியின் சுதந்திரத்தைப் பற்றி சோவியத் அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டிருந்தாலும், அதே சட்டத்தில், அரசாங்கத்தின் மத எதிர்ப்புப் பிரச்சார சுதந்திரம் பற்றியும் சொல்லியிருக்கிறது என்பதை, அவர், ரஷ்ய மக்களுக்கு நினைவுறுத்தினாராம்.

'மதவாதிகள், அரசாங்கத்தை எதிர்க்காவிட்டாலும், மத இலட்சியம் பொதுவுடைமை நிர்மாணத்துக்கு இடையூறு ஆகும்' என்றும் அவர் குறிப்பிட்டாராம்.

யுத்தக் காலத்திலும், அதற்குப் பின்னரும் நாத்திகப் பிரச்சாரம் வன்மையாகச் செய்யப் படாததால், மத நம்பிக்கைகள் புத்துயிர்பெற்றுவிட்டன,"

என்றும், கொரிட்சின், அறிக்கை ஒன்றின் மூலம் நாட்டு மக்களுக்கு அறிவித்துள்ளார்.

'வசதி'களிருந்தால் 'வாடும்' நிலை ஏது?

வாய் இனிக்கப் பேசுவதால் மக்கள் வாழ்க்கை செழிப்புறுமா?

"என்னுடைய வாழ் நாளில் ஒரு போதும் மருத்துவ மனையிலோ, அல்லது சிகிச்சை விடுதியிலோ ஒருநாள் கூட நான் இருந்ததில்லை,"

என்று, பிரதமர் நேரு, இங்கு புற்று நோய் மருத்துவ மனையைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறிவிட்டு, மேலும் சொன்னார்:—

"எவ்வித நோய்களும் வராமல் தடுப்பதே முக்கியம்; மக்களுக்குப் போதுமான உணவு, சுத்தமான வீடு இவற்றை அளிப்பது சிலவிதத் தடுப்பு முறைகளாகும். மருத்துவ மனைகளுக்கு மக்கள் செல்லா வண்ணம் பார்த்துக்கொள்ள அதிகாரிகள் உண்மையாக முயற்சிக்க வேண்டும்; ஆனால், போதுமான நல்ல உணவு, சுத்தமான வீடுகளை மக்களுக்கு வழங்குவதால் நோய்களைப் பெரும் அளவுக்குத் தடுக்கலாம். பற்றாக்குறையான கெட்ட உணவுதான் எந்த நோய்க்கும் மூலகாரணமாகும்."

'இவர் ஐயர்—அவர் ஐயர் இல்லை என்ற ஜாதி பிரச்சினை கிளப்பப்படும்'

கனம் எஸ். எஸ். இராமசாமி படையாச்சியார்தான் பகருகிறார்!

சென்னை, டிச. 9—

"சென்னை மேயர் தேர்தல் சம்பந்தமாக உள்ள வழக்க முறைகள் ஒழிய வேண்டுமென்ற கருத்து இப்போது நிலவுகிறது; இது சரியல்ல என்பதே என் கருத்தாகும்; சமுதாயத்தில் எவ்வளவோ வகுப்பு, சாதிகள் இருக்கின்றன; எல்லா சாதியினருக்கும் மேயர் பதவி கிடைப்பதற்கு வகை செய்யும் பொருட்டு ஒரு உடன்பாடு செய்து கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த வழக்கம் எவருக்கும் குறைவின்றி நல்ல முறையில் நடைபெற்றுவருகிறது. இந்த வழக்கமான முறை இருப்பதால்தான், இராமநாத அய்யர் போன்றவர்கள் மேயர் பதவிக்கு வரமுடிகிறது; இன்றேல், 'அவர் அய்யர்—அவர் அய்யர் இல்லை' என்ற சாதிப் பிரச்சினைகள் எல்லாம் கிளப்பப்படும். எனவே, மேயர் தேர்தல் சம்பந்தமான வழக்க முறையை எதிர்ப்பது நன்மையான ஒன்றல்ல; எவரும் அதை ஆதரிக்கவுமாட்டார்கள்,"

என்று, சென்னை உள்ளாட்சிக் கழக இலாகா அமைச்சர் எஸ். எஸ். இராமசாமி படையாச்சி அவர்கள், சென்னையின் புதிய மேயர் வி. ஆர். இராமநாத அய்யருக்கு அளிக்கப்பட்ட பாராட்டு விழாவொன்றில் தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

ஆந்திராவில் உருவாகும் நாகார்ஜுன அணைக்கட்டு

ரூபாய் 122 கோடி செலவில் அமைகிறது

32 இலட்சம் ஏகருக்குப் பாசன வசதி கிடைக்குமாம்

ஐதராபாத், டிச. 10—

நாகார்ஜுன சாகர் பல நோக்குத் திட்டத்தினை ஐதராபாத்—ஆந்திரா எல்லையில் பிரதமர் நேரு துவக்கிவைத்திருக்கிறார்.

ரூ. 122 கோடி செலவில் அமையும் இந்த அணைக்கட்டுத் திட்டத்தினால் 32 இலட்சம் ஏகர் நிலப்பரப்பிற்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும் என்பதுடன், 75,000 கிலோவாட் மின்சாரமும் உற்பத்தி செய்யப்படும் என்று தெரியவருகிறது.

இந்த அணையின் உயரம் 597 அடி என்றும், நீளம் 4980 அடி என்றும் கூறப்படுகிறது.

தென்னாட்டிலேயே இதுதான் மிகவும் உயர்ந்த அணையாக இருக்கும்; இந்த நீர்த் தேக்கத்தில் 93 இலட்சம் ஏக்கர் அடி தண்ணீர் தேங்கி நிற்கக்கூடும்; இது பக்ரா நீர்த் தேக்கத்தில் தங்கக்கூடிய தண்ணீரின் அளவைவிட 20 இலட்சம் ஏக்கர் - அடி அதிகம்.

இந்த அணையின் மொத்த நீளம் 15,080 அடி; இதில் மண் அணை 6,220 அடி இருக்கும்.

இத்திட்டம் பூர்த்தியான பின், இரு மாநிலங்களின் செல்வ வளர்ச்சிக்கான 'புது யுகம்' பிறக்கும். தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மின்சார சக்தி இதன் மூலம் கிடைப்பதுடன், 13 இலட்சம் டன் உணவுத் தானியங்களின் உற்பத்திக்கு வழி ஏற்படும்.

அணுசக்தியால் இயங்கும் கப்பல் சாத்தியந்தானாம்!

நியூலண்டன், கன்னெக்டிகட்—

அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் 'நாட்டிலஸ்', எரிபொருளுக்காக, எங்கும் நில்லாமல் 25,000 மைல் பிரயாணம் செய்து முடித்துவிட்டதாம்.

இவ்வாறு ஓடியதன்மூலம், அணுசக்தியை மற்ற கடற்படைக் கப்பல்களுக்கும் பயன்படுத்தலாம் என்பதை மெய்ப்பித்துவிட்டதாம்!

தென் துருவத்தைக் காண்பதற்கு முயற்சி

தென் துருவ மண்டலம், 30 இலட்சம் சதுர மைல் கொண்ட பிரதேசம்; அதனைக் காண்பதற்கான முயற்சியில், ரியல் அட்மிரல் ரிச்சர்ட் பர்ட் என்பவர் தலைமையில் குழு ஒன்று ஈடுபட்டுள்ளது.

"தென் துருவம், உலகத்து வானிலையை ஆக்கும் பிரதேசம்; அதனைக் கண்டுவிட்டால், ஒரு பெரிய கண்டத்தைக் காணத் தொடங்கிவிடுவோம்; அதனால், உலக மக்களுக்கு மிக்க நலன் விளையும்," என்று, அட்மிரல் ரிச்சர்ட் கூறியுள்ளார்.

எஃகு உற்பத்தியில் புதிய சாதனை!

அமெரிக்காவின் இவ்வருட எஃகு உற்பத்தி டிசம்பர் நடுப் பகுதி முடிவடையும் காலத்தில் 10,55,30,000 டன்னாக இருக்குமாம்!

பதினெட்டு ராஜ்ய சர்க்கார்கள் ஆரம்பக் கல்வியை கட்டாயமாக்கி சட்டம் இயற்றியுள்ளனர்.

சக்கரங்கள் இல்லாத இரயில் வண்டி

இரைச்சலே இருக்காதாம்!

லண்டன், டிச. 10—

சக்கரங்கள் இல்லாத இரயில் வண்டியை ரஷ்யர்கள் கண்டுபிடித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வண்டி இரும்புக் குண்டுகளின் மேல் இயங்குகிறதாம்.

அடுத்து, இரும்புக் குண்டுகளின் மேல் இயங்கக்கூடிய கார்கள், டிராக்டர்கள் செய்யக்கூடும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பிடப்பட்டுள்ள அந்த இரயில் வண்டி பெரிய சுருட்டு போன்று தோன்றும். தற்போதுள்ள வண்டிகள் உண்டாக்கும் சப்தம் இந்த வண்டியில் இருக்காது; சக்கரங்கள் இல்லாததே இதற்குக் காரணம்; இந்த வண்டி இரயில்வே லைன்களுக்குப் பதிலாக காங்கிரீட் கால்வாய்ப் பாதை வழியாக ஓடும். இந்த வகைபரீட்சார்த்த வண்டி இன்று மாஸ்கோவுக்கு வெளியே ஓடிக்கொண்டிருக்கிறது. இவை சாதாரண பாதைகளில்கூட ஓடக்கூடியவை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய இரயில்வேக்களில் இப்போது மொத்தம் 24 மூன்றாவது வகுப்பு 'சுற்றுப் பிரயாண'ப் பெட்டிகள் இருக்கின்றன. 1955-56-ல் மேலும் இரண்டு பெட்டிகள் சேர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

★

'தென் மாவட்டங்களில் கொடும்புயல் வீசி ஓய்ந்துவிட்டது; கொட்டும் மழையும் நின்றுவிட்டிருக்கிறது — தற்காலிகமாகத்தான்,' என்று வானிலை ஆராய்ச்சிக் கூடத்தவர் அறிவிக்கின்றனர்.

புயல் ஓய்ந்திருக்கிறது— ஆனால், அது வீசியதால் விளைந்த நாசங்கள், நாட்டவர் உள்ளத்தில் வேதனைப் புயலை எழுப்பிவிட்டிருக்கின்றன.

கொட்டும் மழை நின்றிருக்கிறது—ஆனால், பேய் மழையால் பெருக்கெடுத்த வெள்ளம் விளைவித்த கோரம், இன்னும் இதயம் படைத்தோரைக் கொட்டிக் கொண்டிருக்கிறது.

கடந்த கிழமையில், தென் மாநிலங்களில்—குறிப்பாகத் தஞ்சை, இராமநாதபுரம் மாவட்டங்களில் வீசிய கோரப் புயலும், பெய்த கொடுமழையும் விளைவித்துள்ள நாசங்கள்— பெருங் கேடுகள் குறித்து, இன்னும் வெளிவந்துகொண்டிருக்கும் செய்திகள் நம்மைத் திகைக்க வைக்கின்றன! தேம்பி அழுகிறது தமிழகம்!

மூன்றாண்டுகளுக்கு முன் தஞ்சையில் வீசிய புயல், வாழைத் தோட்டங்களை— தென்னந் தோப்புகளை—செந்நெல் வயல்களைச் சூறையாடிச் சென்றது! வீடுகளை—குடிசைகளைப் புழுதிமேடாக்கிச் சென்றது! சாலைகளை—சோலைகளை நிர்மூலமாக்கிற்று! ஆனாலும், உயிர்ச் சேதம் அவ்வளவு இல்லை.

ஆனால், இம்முறை, ஆயிரம் பேருக்கு மேல் உயிரிழந்திருக்கக்கூடும் என்று செய்தி கிடைக்கிறது—நம்மைச் செயலற்றவர்களாக்க!

உயிரிழந்த உத்தமர்கள்— எத்தனை கால்வயிறுகளுக்குக் கஞ்சி வார்த்துவந்த உருவங்களோ! எத்தனை பேர்— பிள்ளைகள் பெற்ற பெற்றோர்களோ! எத்தனை பேர்—மழலை மொழியும் குலக் கொழுந்துகளோ!—நாமறியோம்!

உற்றார் உறவினர், பெற்றோர், மற்றையோர் எத்தனை பேரோ, அழுது புலம்புவர்— இந்த அவலம் கண்டு!

புயலாலும், வெள்ளத்தாலும் இலட்சக் கணக்கான கால்நடைகள்—நாட்டின் வளமான செல்வங்களின் ஒரு பகுதி கொல்லப்பட்டிருக்கிற கோரம் நம்மை துயரக் கடலில் ஆழ்த்தி அமிழ்த்துகிறது.

தென்னையும், வாழையும், தென்னாட்டவரின் பொருளாதார நிலையில் உறுதியானதோர் இடம் பெற்றிருக்கும் செல்வங்கள்.

செந்நெல்லும், இதரவையும் நாட்டவரின் உயிர் தரும் உணவுப் பொருள்; இவற்றிற்கு ஏற்பட்டுள்ள பெருஞ் சேதம், நினைக்கவே நடுக்கும் தன்மையன!

இத்தனை கேடுகளுக்குத் தமிழக மக்கள் ஆளாகியிருப்பது, ஈரமுள்ள நெஞ்சம் கொண்டோரை இரக்கம் சுரக்கச் செய்வதாகும்.

க்கப்பட்டப் பகுதிக
இன்னும் எந்தவகைத்
பும் கொள்ள இயலாத
டிக்கிறது என்றறியும்
சேதம் எவ்வளவு
ம் என்பதை நம்மால்
கூட முடியவில்லை.

டுமைக்காளாகித் தவிப்
க்கு, நம் கண்ணிலிருந்து
கண்ணீரைக் காணிக்கை
கிறோம்.

வாசல், சொத்து சுகம்,
தவிப்போரின் இன்
போக்க, கண்ணீர்
க, நாட்டவர் அனை
ம்மாலான அத்தனையும்
கடப்பாடுடையவர்
; ஏனெனில், சிலரால்
செய்துவிடக்கூடிய
வாழ்விழந்து புலம்பும்
க்குச் செயலளவில்
தருவது!

ஆறுதல் தர, சென்னை
மந்திரி காமராசர் உட
மேற்கொண்டுள்ள
நடவடிக்கைகள் உண்
லயே பாராட்டுதலுக்
. பாதிக்கப்பட்ட
ளிலேயே தங்கி, கண்
விடும் மக்களைக்கண்டு,
நிலையில், கஷ்டநஷ்டங்
னுபவித்தோருக்கு ஆறு
வாழ்வும் தர முற்பட்டி
காமராசர், உண்மையி
ஒரு முதன் மந்திரியின்
ம் கொண்டவராக
ரூர் இந்த விஷயத்தி
என்பதறிய மகிழ்

கார் மட்டுமின்றி, இதர
நல நிறுவனங்கள் பல
ரண வேலையில் ஈடுபட்
தறியப் பெருமகிழ்வு
கிறோம்.

மு. கழகப் பொதுச்
ளர் விடுத்திருந்த அறிக்
னங்க, கழகத் தோழர்
லரும் ஆங்காங்கு பல
மக்களுடன் இணைந்து,
வேலைகளில் ஈடுபடு
கட்டு மகிழ்ச்சி கொள்

னையில், பல்வேறு
ட்ட பெரியவர்கள்,
ர்கள் முதலானோர்
ன்றி, சினிமா நடிக-
ரும் நிவாரணத்திற்கு
ரட்டுவதறியப் பெரு
கொள்கிறோம்.

டுமைக்கும், சோகத்திற்
ளான தென் மாவட்ட
ன் கண்ணீர் துடைக்க,
வட்ட மக்கள் பலரும்,
ரும் ஒன்று சேர்ந்தால்
முடியும்; அந்த நிலை
கி வருவது காண
ழ்வு கொள்கிறோம்.

சகோதரர்கள் துன்பத்
யிற்பட்டபோது,
இரக்கமற்றவர்களாய்,
செய்ய இயலாதவர்க
ந்தோம்—என்ற பழிச்
க்கு ஆளாகாது,
க்கள் ஒவ்வொருவரும்
கடமையைச் செய்ய
வர் என்று நம்பு
ம்; முன்வரவேண்டும்
வேண்டுகிறோம்.

பாதி
ளுடன்
தொட
நிலை
போது,
இருக்
யூகிக்க

கொ
போரு
கசியும்
யாக்கு

வீடு
இழந்
னல்
துடை
வரும்
செய்ய
களாவ
மட்டு
தல்ல—
மக்களு
ஆறுத

இந்
முதன்
னடியா
தீவிர
மைபி
குரிய
பகுதிக
ணீர்
கலங்கி
களை அ
தலும்,
ருக்கும்
லேயே
உள்
இருக்கி
லேனுப்
கிறோம்

சர்க்
பொது
வும் நி
டிருப்ப
கொள்

தி.
செயல
கைக்கி
கள் ப
துறை
நிவாரண
வது
கிறோம்

சென்
தனிப்ப
வர்த்தக
மட்டுமி
நடிகை
நிதி
மகிழ்வு

கொ
கும் ஆ
மக்களி
இதர ம
சர்க்கா
நிச்சய
உருவ
அகமகி

நமது
தின் வ
நாம்
ஏதும்
ளாயிரு
சொல்
தமிழ்
தங்கள்
முன்வ
கிறோ
என்று

செய்திச் சுருள்

★

தாளமுத்து — நடராசன் முன்னேற்ற மன்றம்

வட சென்னை—

5—12—55 ஞாயிறு மாலை 6½ மணியளவில் சென்னை இராயபுரம் வட சென்னை தாளமுத்து-நடராசன் முன்னேற்ற மன்ற இல்லத்தில், தோழர் சு. பாலன் தலைமையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் தாஸ், இரா. பு வியரசு, இரா. சுந்தரமூர்த்தி, மற்றும் பல தோழர்கள் பல தலைப்புகளில் பேசினர். இறுதியில் சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் இளம்பரிதி அவர்கள், மன்றத் தோழர்கள் ஆற்றவேண்டிய பணி குறித்தும், இன்றைய காமராசர் சர்க்காரின் தமிழ்ப் பற்றற்றப் போக்கினைக் கண்டித்தும் நீண்டதோர் உரை நிகழ்த்தினர்

மாயூரம் வேலாயுதம் மன்றம்

27—11—55 இரவு 8 மணிக்கு, ஆசிரியர் வேலாயுதம் மன்றப் பொது உறுப்பினர் கூட்டம் மன்றக் கட்டிடத்தில் தோழர் என் கிட்டப்பா தலைமையில் நடைபெற்றபோது, தோழர் அ. செங்குட்டுவன் அவர்களைச் செயலாளராகக் கொண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. இறுதியில் மன்ற உறுப்பினர் தோழர் க. மாரிமுத்து அவர்களின் தாயார் சுந்தராம்பாள் அம்மையார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

பெங்களூர் தென்றல் நாடக மன்றம்

20—11—55 பிற்பகல் 3-மணிக்கு, சீராமபுரம் எரப்பா பகுதியில், மேற்படி நாடக மன்றம் திரு. ப. செல்வராசன் அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது. நாடக மன்றங்கள் இயங்கவேண்டிய முறை, தாங்கவேண்டிய தொல்லை, பரப்பவேண்டிய கொள்கை முதலியவை குறித்து தோழர் ப. செல்வராசன் விரிவுரையாற்றினர். தோழர் ஆர். விசயரங்கம் தலைவராகவும், தோழர் செல்வநாதன் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

முத்துக்கிருட்டிணபுரம் மறுமலர்ச்சி மன்றம்

6—12—55 இரவு 8 மணிக்கு கடையநல்லூர் முத்துக்கிருட்டிணபுரம் மறுமலர்ச்சி மன்றப் பொது உறுப்பினர் கூட்டம், தோழர் ப. புகழேந்தி தலைமையில் நடைபெற்றபோது, தோழர் பா. வென்னையின் விலகல் கடிதம் ஏற்கப்பட்டு பதிலாகத் தோழர் மா. சுப்பையாவைப் பொருளாளராகத் தேர்ந்தெடுத்தும், புயல், வெள்ளம் இவற்றின் கொடுமையால் பாதிக்கப்பட்டுள்ள தஞ்சை, இராமநாதபுரம் மாவட்ட மக்களுக்கும், பேராசிரியர் இருதயராஜ் அவர்களது மறைவுக்கும் அனுதாபம் தெரிவித்தும், மற்றுமொரு முக்கியத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

சென்னை (8-வது வட்டம்) மக்கள் மன்றம்

சென்னை (8-வது வட்டம்) பெத்துநாய்க்கன் பேட்டைவாசிகளின் நலத்திற்கென, 'மக்கள் மன்றம்' எனும் பெயரில் ஒரு மன்றம் நிறுவப்பட்டுள்ளது.

திருவள்ளுவர் கல்விக் கழகம்

20—11—55 காலை, சென்னை மீர்சாகிப்பேட்டை, சந்தா சாயபு தெரு, எண். 15 இல்லத்தில், மேற்படி கழகத்தை, நகராண்மைக் கழக உறுப்பினரான டாக்டர் எம். ஏ. கரீம் திறந்துவைத்துப் பேசினர். தோழர்கள் கண்ணபிரான், நாராயணசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சென்னை, திருவள்ளுவர் முத்தமிழ் கழகம்

22—11—55ல் மேற்படி கழகப் பணிமனையில் (எண். 10, லாயர் சின்னதம்பி தெரு,) நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் பேராசிரியர் இருதயராஜ் அவர்களது மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், சிகாகோ நகரில் தமிழனை கேவலமான நிலையில் சித்தரித்து சிலை வடித்து, அவனை 'இரு இனத் தவருக்குப் பிறந்தோன்' என்று குறிப்பிட்டிருப்பதைக் கண்டித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

சலவைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம்

திருச்சி, வண்ணாரப்பேட்டையில், 28—11—55ல், சலவைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. 15 பேர் கொண்ட செயற் குழுவும், தோழர்கள் ஆர். வீராசாமி, ஆர். அருச்சுனன், கே. புருஷோத்தமன் ஆகியோர் முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நிர்வாகக் குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வட சென்னை முடிதிருத்துவோர் சங்கம்

22—11—55 காலை 9-மணிக்கு சங்கக் கட்டிடத்தில், முடி திருத்துவோர் சங்கப்பொதுக்கூட்டம் தோழர் வி. சிங்காரவேலு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எ எஸ் சேனி, எம். துரைசாமி, எம். சின்னப்பா, சி ராமசாமி, எ. மதுரை, க கருப்பையா, பி. சண்முகம் எ. டில்லி, எஸ். பூங்காவனம், எம். எஸ் எஸ். மணி, இராசெகநாதன் ஆகியோர் சங்க ஒற்றுமை குறித்துப் பேசினர். கூட்ட இறுதியில், வாரந்தோறும் செவ்வாயன்று கடைஅடைப்பது என்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டதுடன், தோழர் எ. டில்லி அவர்களைப் பொருளாளராகத் தேர்ந்தெடுத்தும் முடிவு செய்யப்பட்டது.

மாயூரம் திருவள்ளுவர் படிப்பகம்

6—11—55ல், கே. சுந்தரம் தலைமையில் நடைபெற்ற படிப்பகச் செயற்குழுக் கூட்டத்தில் வரவு-செலவுகள் பரிசீலிக்கப்பட்டு, ஒத்துக்கொள்ளப்பட்டதுடன், படிப்பகத்திற்குச் சொந்தமாக ஒரு கட்டிடம் கட்டுவதற்கு இடம் நிர்ணயிக்கவும், இதற்கான அலுவல்களைக் கவனிக்க தோழர் ஆர் ராமானுசம் தலைமையில் ஒரு குழு அமைத்தும் முடிவு செய்யப்பட்டது.

மாணவர் மன்றம் உறுப்பினர் கூட்டம்

20—11—55 அன்று பிற்பகல் 4 மணிக்கு, உயர்திரு, பேராசிரியர் பாரிப்பாக்கம் கண்ணப்பர் அவர்கள் தலைமையில் மன்ற உறுப்பினர் கூட்டம் துவக்கப் பெற்றது. சென்ற ஆண்டு தேர்ந்தெடுக்கப்பெற்ற செயற் குழுவினரே இவ்வாண்டுக்கும் தொடர்ந்து பணியாற்றத் தீர்மானிக்கப்பட்டதுடன், மன்ற வரவு செலவு கணக்குகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. சென்ற ஆண்டினைப் போலவே இவ்வாண்டும் மன்றத் தமிழ்த் தேர்வினைச் சிறப்பாக நடத்துவதென்றும், திருமயிலை சிவமுத்து அவர்கள் பிறந்த தினத்தை சிறப்பாக கொண்டாடுவதென்றும், தமிழ்த் திருநாளான பொங்கலன்று மன்றச் சார்பில் தமிழ் இதழ் ஒன்றினை வெளியிடுவதென்றும், அண்மையில் நடைபெற இருக்கும் மன்ற வெள்ளி விழாவினை சிறப்பாக நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இறுதியில் அனுதாபத் தீர்மானங்கள் பலவும் நிறைவேற்றப்பட்டன.

திருமணங்கள்

★

27—11—55-ல், மேச்சேரி அடுத்த மறக்கோட்டையில் தோழர் மு. ப. சிவம்—தோழியர் வான்மதி திருமணம், தோழர் வை. ச. சிவம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ம. குட்டியப்பன், அ. அண்ணாமலை, வரதராசன் அ. பாலு, க. கு. சின்னசாமி ஆகியோர் மணமக்களை வாழ்த்தியும், சீர்திருத்தத் திருமணம் பற்றியும் பேசினர். இத்திருமண நினைவாக, மணமக்களால், 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அளிக்கப்பட்டது.

* * *

18—11—55-ல், நாமக்கல் வட்டம் மணப்பள்ளித் தோழர் எம். எ கருப்பய்யா—தோழியர் பழனியம்மாள் திருமணம் நடைபெற்றது. அது நினைவாக, 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

* * *

தோழர் என். எ. பெரியசாமி—தோழியர் தனபாக்கியம் திருமணம் ஆத்தூர் அடுத்த நரசிங்கபுரத்தில் தோழர் பி. எம். ரங்கசாமி தலைமையில், 30—10—55 காலை 10 மணி அளவில் நடைபெற்றது. தோழர் முகவை - ஆர். எஸ். பாண்டியன், மணமக்களை வாழ்த்தியும், சீர்திருத்தத் திருமணம் குறித்தும் சொற்பொழிவாற்றினர். மணமக்கள் சார்பில் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அனுப்பப்பட்டது.

* * *

சின்னதாராபுரம் அடுத்த மல்லம் பாளையத்தில், 25—11—55 காலை 9 மணியளவில், தோழர் ம. பா. நாச்சிமுத்து—தோழியர் அ. தி. இலக்குமி அம்மையார் திருமணம், தோழர் ஈ.வெ.கி. சம்பத் தலைமையில் நடைபெற்றது. தோழர் அ. பொன்னம்பலனார் மணமக்களை வாழ்த்திப் பேசினர். இத்திருமணத்தின் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை அளிக்கப்பட்டது.

* * *

4—12—55-ல், சோழவந்தான் தோழர் கா. காளியப்பன்—தோழியர் இராசம்மாள் திருமணம் தோழர் தா. ஆவுடையப்பன் தலைமையில் நடந்தேறியது. இதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது.

(அன்பளிப்புகளைப் பெற்றுக்கொண்டோம் — நன்றி — பொறுப்பாளர்)

உறுப்பினர் அல்ல

சிதம்பரம், டிச. 10—

"இவ்வூர் நகராண்மைக் கழகத் தலைவர் தேர்தலில் தி. மு. கழக உறுப்பினர் தோழர் சி. எஸ். சடகோபன் வழிமொழிந்ததாக, 11-10-55 'தினத் தந்தி'யில் வெளிவந்த செய்தி தவறுடையது.

"தோழர் சி. எஸ். சடகோபன் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்"

என்று தில்லை திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் தோழர் இரா. சக்கரவர்த்தி அறிவிக்கிறார்.

வள்ளுவர் படிப்பகத் திறப்பு விழா

3—12—55 மாலை 6 மணிக்கு, பெரியகுளம் கீழவடகரை காந்தி தெருவிலிருக்கும் வள்ளுவர் படிப்பகத்தை திரு. சுப்பராயன் அவர்கள் தலைமை தாங்கித் துவக்கி வைத்தார். தோழர்கள் வசனப்பித்தன், சிவக்கொழுந்து, எஸ். ஜெயராஜ், குழந்தைவடிவேலு, பாண்டியன், கே எம். எம். மேத்தா ஆகியோர் பேசினர்.

சிறப்புக் கூட்டம்

6—12—55 அன்று, மணப்பாடு, புனித குசையப்பர் உயர்நிலைப்பள்ளி 'வீரமா முனிவர் தமிழ்க் கழகத்'தின் சார்பில், திரு. க. சந்திரசேகரனர் தலைமையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில், 'அன்றும் இன்றும்' என்ற தலைப்பில் தோழர் சண்முகம் குலசேகரன் சொற்பொழிவாற்றினர்

பிறப்பு

சென்னை (48-வது வட்டம்) சைதாப்பேட்டை தி. மு. கழகத் தோழர் எம். ஞானசேகரன் அவர்களின் துணைவியார் 10—11—55 அன்று ஆண் குழந்தைக்கு தாயானர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

* * *

6—12—55ல், சாலையூர் உழவர் நகர் தி. மு. கழகத் தோழர் மு இறைவிழியன் துணைவியார் ஒரு பெண் மகவைப் பெற்றெடுத்தார் இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

ஃ ஃ ஃ

21—11—55ல், தூத்துக்குடி 'ரத்ன சியக்காய்' யில் உரிமையாளர் தோழர் ந. காசிராசன் அவர்களின் துணைவியார் ஓர் ஆண் மகவுக்குத் தாயானர். அதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது.

ஃ ஃ ஃ

4—12—55ல், திருப்பத்தூர் (வ. ஆ) தி. மு. கழகத் தோழர் ஏ. கண்ணன் அவர்களின் துணைவியார் ஒரு பெண் மகவைப் பெற்றெடுத்தார். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

ஃ ஃ ஃ

28—11—55ல், சென்னை 19-வது வட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் டி. நடராசன் அவர்களின் துணைவியார் ஒரு பெண் மகவுக்குத் தாயானர்.

[அன்பளிப்புகளைப் பெற்றுக் கொண்டோம்— நன்றி—பொறுப்பாளர்.]

பெயர் சூட்டல்

20—11—55 காலை 9 மணிக்கு, சென்னை 34-வது வட்ட தி. மு. கழகத் தோழர் சி. வீ. பச்சையப்பன் அவர்களது பெண் மகவுக்குத் தோழர் தி. ச. சின்னிவன்னன் தலைமையில் பெயர் சூட்டு விழா நடைபெற்றது தோழர் அ. பொ. அரசு, 'பொற்கொடி' என்று பெயர் சூட்டினர். மகவை வாழ்த்தித் தோழர்கள் வ. சங்கரநாராயணன், என். ஆர். இராதா ஆகியோர் பேசினர். இது நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

* * *

27—11—55 பகல் 12 மணி அளவில், திருச்சி, கீழ்அரண்சாலை 27-ம் எண் இல்லத்தில், மலைக்கோட்டை மறுமலர்ச்சி மன்ற உறுப்பினர் தோழர் அன்பழகன் மகவுக்கு தோழர் அன்பில் தருமலிங்கம் அவர்களால் 'மதிவாணன்' எனப் பெயரிடப்பட்டது தோழர்கள் எம். எஸ். மணி, பராங்குசம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இது நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ 1 நன்கொடை தரப்பட்டது.

* * *

8—12—55 சென்னை ஓட்டேரி பொன்னியம்மன் கோயில் வீதியில் நடைபெற்ற சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மன்ற துவக்கவிழாவில், தோழர் சி. பி. சிற்றரசு அவர்களால், தோழர் வரதராசன் அவர்களின் ஆண் மகவுக்கு 'அறிவானந்தன்' எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிக்கப்பட்டது.

[அன்பளிப்புகளைப் பெற்றுக் கொண்டோம்—நன்றி—பொறுப்பாளர்]

எஸ். ஆர். எம். யூ. மத்திய நிர்வாகக் குழு முடிவுகள்

விழுப்புரத்தில், 4—12—55-ல், எஸ். ஆர். எம் யூ., மத்திய சங்கத் தலைவர் தோழர் இராகவானந்தம் தலைமையில் நடைபெற்ற மத்திய நிர்வாகக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்:—

1. பொதுச்செயலாளர் கடிதத்தில் கண்டுள்ள குற்றச்சாட்டுகள் நியாயமானது என்று ஒத்துக்கொண்டு அவரது விலகலைப் பற்றிப் பரிசீலிப்பதை, பொதுக் குழுக் கூட்டம்வரை தள்ளிப் போடுவது;

2 (அ) கூட்டுப் பொதுச்செயலாளர் மீது 10 குற்றங்கள் சாட்டி, அவரை ஐந்து ஆண்டுகள் விலக்கி வைப்பது;

(ஆ) தோழர் பரமசிவம் கூட்டுப் பொதுச் செயலாளராகவும், பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

3 பொன்மலை, திருச்சி, பெரம்பூர் கிளைகளின் மீது ஐந்து குற்றங்கள்சாட்டி, 'ஏன் கலைக்கப்படக் கூடாது?' எனச் சமாதானம் கேட்பது.

4. தோழர் ஆளவந்தார் மீது இரண்டு குற்றங்கள் சாட்டி, 'ஏன் ஐந்து ஆண்டுகள் விலக்கப்படக் கூடாது?' என்று சமாதானம் கேட்பது;

5. 'முரசு' இதழை சனவரியிலிருந்து வெளியிடுவது.

கூட்டத்தில் கலந்துகொண்ட மத்திய நிர்வாகக் குழு உறுப்பினர்கள்:—

தோழர் இராகவானந்தம், மத்திய சங்கத் தலைவர்.

கடலூர் கிளை: தோழர்கள் இலக்குமணன், என். எஸ். கண்ணன், இரங்கநாதன்.

விழுப்புரம் கிளை: தோழர்கள் வாசுதேவன், பக்தவத்சலம், கண்ணன்.

விருத்தாசலம் கிளை: தோழர்கள் ஐசையா, பலராமன்.

சேலம் கிளை: தோழர்கள் தங்கராசு, வீராசாமி, இராமசாமி.

திருவண்ணாமலை கிளை: தோழர்கள் தட்சணாமூர்த்தி, குப்புசாமி, இராமலிங்கம்.

திருச்சி கிளை: தோழர் பரமசிவம்.

செங்கல்பட்டு கிளை: தோழர்கள் இராமச்சந்திரன், வியேர் ஜோசப், நடராசன்.

சென்னை கிளை: தோழர்கள் நல்லப்பன், சுவாமிநாதன், சாலியர் உசேன்.

பெரம்பூர் கிளை: தோழர் முருகவேள்.

மாயவரம் கிளை: தோழர் இராக...

விருதுநகர் கிளை: தோழர்கள் பிரகாசம், கருப்பையா.

திருவாரூர் கிளை: தோழர் ஆறுமுகம்.

மதுரை கிளை: தோழர்கள் நடராசன், வெங்கடாசலம்.

லால்குடி கிளை: தோழர் சிவப்பிரகாசம்.

நிர்வாகக் குழுவின் முடிவிற்குக் கட்டுப்படுவதாக, மத்திய சங்கத் துணைச் செயலாளர் தோழர் வாசுதேவன், லால்குடி செயலாளர் தோழர் கல்யாணசுந்தரம், உறுப்பினர் குஞ்சிதபாதம் ஆகியோரிடமிருந்து கடிதங்கள் வந்திருந்தன.

விழுப்புரத்தில் எடுக்கும் முடிவிற்கு ஆதரவு தருவதாக யூனியனில் இப்போது உறுப்பினரல்லாத நூற்றுக்கு மேற்பட்ட பெரம்பூர் தோழர்கள் கையெழுத்திட்டுக் கடிதம் எழுதியிருந்தார்கள். முன்னாள் பெரம்பூர் செயலாளர் கமல்நாதனும் ஆதரித்துக் கடிதமெழுதியிருந்தார்.

புல்கானின், குருசேவுக்கு 'திருக்குறள்' அன்பளிப்பு

இந்தியாவுக்கு வருகை செய்த ரஷ்ய நாட்டுத் தலைவர்களுக்கு, ஆம்பூர் திருவள்ளுவர் கழகத்தார் ஆங்கில மொழி பெயர்ப்புடன் கூடிய திருக்குறளை (டில்லியிலுள்ள ரஷ்யத் தூதவர் மூலம்) அனுப்பி வைத்தனர். ரஷ்யத் தலைவர்கள் தாயகம் திரும்புகையில் திருக்குறளை அவர்களிடம் டில்லியிலுள்ள ரஷ்யத் தூதுவர் கொடுப்பார்.

முகவரி

ஜி. அப்பாசாமி,
c/o கோவை அரசு,
பெரியகடை வீதி, கோவை

தஞ்சை மாவட்டத்தில் புயல் விளைவித்த சேதம்

பட்டுக்கோட்டை - அறந்தாங்கி தாலுகா நிலை

மாவட்டச் செயலாளர் என். எஸ். இளங்கோ தரும் செய்தி

பட்டுக்கோட்டை, டிச. 9—

"பட்டுக்கோட்டை அறந்தாங்கி வட்டங்களில் புயல் விளைவித்தக் கொடுமை, சொல்லும் தரமில்லை; கடல்நீர் புகுந்து வீடிழந்து கண்ணீர் சிந்துபவர்களும், உயிரிழந்து—உடைமையிழந்து ஓலமிடுபவர்களும், இன்னும் பெய்துகொண்டிருக்கும் மழையின் காரணமாக இடிந்துகொண்டேயிருக்கும் குடிசையில் குற்றுயிராய் கிடப்பவர்களின் சோகச் செய்தியும் நெஞ்சை நெக்குருக வைக்கிறது. உணவுத் தானியங்கள் மழையில் நனைந்துபோனதால், குற்றுயிரும் குலைஉயிருமாகக் கிடக்கும் மக்கள் தொகை சொல்ல முடியாது— சில இடங்களைத் தவிர, பிற இடங்களில் சர்க்கார் அலுவலர்களின் அலட்சியம் வேதனை தருவதாக இருக்கிறது; நிவாரண வேலைக்கே இலாயக்கில்லாத சில அதிகாரிகளின் பாராமுகமும், இன்னும் சில கிராமங்களுடன் தொடர்பே ஏற்படுத்திக்கொள்ளாத நிலையும் வேதனை தருவதாக இருக்கிறது.

"பட்டுக்கோட்டை — அறந்தாங்கி வட்டங்களில் இரண்டு மூன்று தினங்களாகப் பொதுக்குழு உறுப்பினர் தோழர்கு அடைக்கலம் அவர்களுடன் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டும் நிவாரண வேலைகளைக் கவனித்தும் வருகிறேன்.

"பட்டுக்கோட்டை நகரம் பெரும் சோதனைக்குள்ளாகியிருக்கிறது. நகரிலிருந்த சுமார் 3,000 கூரை வேய்ந்த சிறு வீடுகள் அடியோடு இடிந்து பாழாகிவிட்டன. சுமார் ஆயிரம் கல் வீடுகளும் பழுதாகி நிற்கின்றன. பட்டுக்கோட்டையிலும் அதைச் சுற்றியிருக்கிற கிராமங்களிலும் ஏராளமான வீடுகள் சேதமாகியிருக்கின்றன.

"பேராவூரணியில் ஏறக்குறைய எல்லா வீடுகளும் விழுந்துவிட்டன; இன்றுவரை விடாது பெய்துகொண்டிருக்கிற மழையின் காரணமாக மக்கள் குளிருக்கும், மழைக்கும், பசிக் கொடுமைக்கும் ஆளாகியுள்ளனர்; சுற்று வட்டாரங்களில் பல ஆயிரம் தென்னை மரங்கள் கீழே விழுந்து கிடக்கின்றன; தென்னை காய்க்க 5 வருடங்களாகும். சென்ற புயலுக்குப் பின் நின்றுகொண்டிருந்த தென்னைகள் விழுந்துவிட்ட காரணத்தால் தென்னை விவசாயத்தை நம்பிக்கொண்டிருந்த பல ஆயிரம் மக்கள் வாழ வழியின்றித் தேம்பித் தேம்பி அழுதவண்ணமுள்ளனர். பக்கத்துக் கடல் சார்ந்த கிராமங்களான சேதுபாவாசத்திரம், மல்லிபட்டினம், சின்னமனை போன்ற பகுதிகளில் கடல் நீர் புகுந்து அங்குள்ளவர்களின் வீடுகளை வீழ்த்தியதோடு மட்டுமின்றி, தொழில் சாதனமான வலைகள், ஆழ்கடல் செல்லும் படகுகளை இழந்து நிற்கின்றனர். இன்னும் இங்கெல்லாம் போக்குவரத்து சரிப்படவில்லை. இந்த வட்டாரத்தில் இருந்த பத்துக்கு மேற்பட்ட நெல் ஆலைகள் சேதப்பட்டிருக்கின்றன. இருப்புத் தானியங்கள் மழையில் நனைந்து பாழாகிவிட்டிருக்கின்றன.

"அறந்தாங்கியைச் சேர்ந்த சில கிராமங்கள் மீமிசல், அம்மாபட்டிணம், கோட்டைப்பட்டிணம், ஆவிடையார் கோவில், திருபுனவாசல், மணமேல்குடி முதலிய ஊர்கள் இன்னும் வெள்ளத்தால் துண்டிக்கப்பட்டிருக்கின்றன. விமானத்தின் மூலம் உணவுவகைகள், ஆடைகள் வீசப்பட்டால்தான் அவர்களில் பல ஆயிரவர்களின் உயிர் காப்பாற்றப்படலாம்.

"பேராவூரணி— அறந்தாங்கி வட்டாரத்தில் பசுக்களும், காளைகளும், வளர்ப்பு ஆட்டுக்கடாக்களுமாகச் சுமார் 50,000 மாண்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. சாலை ஓரங்களிலும், வயல் வரப்புகளிலும் அவைகள் செத்துக் கிடக்கின்றன; அவைகளின் நாற்றம் சகிக்க இயலவில்லை. இந்த வட்டாரத்தில் ஏராளமான வீடுகள் சேதம் என்று மதிப்பிடுகிறேன்.

"அதிராம்பட்டினத்தில் கடல் நீர் புகுந்து மீன்பிடி குப்பங்கள் பல பலத்த சேதத்துக்கு உள்ளாகியிருக்கின்றன கரையூர் தெரு, செம்பட தெரு, புதுப்பட்டினம், மல்லிபட்டினம் முதலிய மீன்பிடி குப்பங்களில் அனேகமாக எல்லா வீடுகளும் இடிந்துவிட்டன. படகுகள் எல்லாம் சேதமடைந்துவிட்டன. தென்னை மரங்கள் விழுந்திருப்பதை எண்ணிப்பார்க்க முடியவில்லை. அதிராமபட்டினம், பேராவூரணி, தம்பிக்கோட்டை முதலிய ஊர்களில் ஆயிரக்கணக்கில் தென்னை மரங்கள் விழுந்திருக்கலாம் என்று மதிப்பிடுகிறேன்.

"அதிராம்பட்டினத்தில் இருப்பு இருந்த உப்பு மூட்டைகள் கடல் நீரால் கரைக்கப்பட்டிருக்கின்றது உப்புப் பாத்திகள் உருத்தெரியாத அளவுக்குச் சேதமாயிருக்கின்றன

"அதிராம்பட்டினத்தில் பஞ்சாயத்து எல்லையில் மட்டும் 3,000 கூரைவேய்ந்த வீடுகள், 1,000 கல் வீடுகளும் சேதமடைந்திருக்கின்றன. இன்னும் சுற்றுப்பட்ட கிராமங்களுடன் தொடர்புகொள்ளவில்லை.

"பட்டுக்கோட்டை — அறந்தாங்கி வட்டாரத்தில் பல்லாயிரக் கணக்கான கூரை வீடுகளும், ஓட்டு வீடுகளும் சேதமடைந்திருக்கலாம் என மதிப்பிடப்படுகிறது.

"அதிராம்பட்டினம் காதர் முகயதீன் கல்லூரி காப்பாற்றப்பட்டுவிட்ட போதிலும், மாணவர் விடுதி அடியோடு சேதமாகிவிட்டது. கல்லூரி முதல்வர் விடுதி மாணவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தது பாராட்டத்தக்கது. மாணவர்களின் புத்தகம் உடை, உடைமைகள்யாவும் இன்னும் விடுதி இடிபாடுகளுக்குள்ளேயே கிடக்கின்றன. கல்லூரி ஒரு மாதம் விடுமுறை விடப்பட்டிருக்கிறது.

உயிர்ச் சேதம் பற்றி இன்னும் சரியான கணக்குகள் தரப்படவில்லை. இறந்தவர்களின் பிணங்கள் நாற்றமெடுக்கவே ஆங்காங்கு புதைக்கப்பட்டு, சர்க்கார் அதிகாரிகள், நிருபர்கள் பார்வைக்குச் சரியான அளவில் கொண்டுவரப்படவில்லை.

"சின்னமனையைச் சேர்ந்த ஒரு மீன்பிடி குழு எட்டு பேருடன் கடலில் சென்றது அதில் ஒருவரைத் தவிர ஏழு பேர் கடலில் மாண்டுபோனதாகத் தகவல் எட்டியிருக்கிறது.

"மொத்தமாக அறந்தாங்கி—புதுக்கோட்டை தாலுகாவில் 100 பேர் மாண்டிருக்கலாமென யூகிக்கப்படுகிறது.

நிவாரணம் தேவை

"நான் போன இடங்களிலெல்லாம் மக்கள் சூழ்ந்துகொண்டு கண்ணீர் வடித்து சோகக் கதைகளைச் சொன்னவண்ணமிருந்தனர். ஆடைகளில்லாமல் சருகு—தழைகளை உடுத்திக் கொண்டிருந்தவர்களைக் கண்டேன்.

"சர்க்கார் உடனடியாகத் துப்பட்டிகள் — ஆடைகள் ஏராளமாகத் தருவிக்கவேண்டும் ஆலைகளின் உற்பத்தி சில மாதங்களுக்கு இந்த வட்டாரத்துக்கு அனுப்பப்பட்டாலுங்கூட நிலைமை சீர்ப்படாது எனத் தோன்றுகிறது.

"சில இடங்களில், கஞ்சித் தொட்டிகள் திறக்கப்பட்டிருந்தாலும் கூட, சென்ற புயல் நிவாரணம் போலவே, இடையில் கொள்ளை போகிறது எனக் குறிப்பிட்டார்கள்.

"பேராவூரணியில் ஒருவர், வரி வசூலிக்கும் சர்க்கார் அதிகாரிகளிடம் வாரி வழங்கும் தன்மையை எவ்வாறு எதிர்பார்க்க முடியும் எனக் குறிப்பிட்டார். சில கிராம அதிகாரிகள் வழக்கம் போலவே நடந்து கொள்கிறார்கள் என்றும், நிவாரண வேலைகளுக்கு அவர்களைப் பயன் படுத்துவது மிக ஆபத்தானது எனவும் கருத்தறிவித்திருக்கிறார்கள். சமூக சேவையில் ஈடுபாடும், ஆர்வமும் கொண்டிருக்கிற சகல கட்சிகளின் தொண்டர்களைத் திரட்டி நிவாரணக் குழு அமைப்பதே சிறந்தது என்று கருத்தறிவித்திருக்கிறார்கள்.

"உடனடியாக உணவும்—உடையும் இந்தப் பகுதிகளுக்குத் திருப்பப்பட்டால் சில ஆயிரம் மக்களைக் காப்பாற்றலாம் என்றே பொதுவாகக் கருதப்படுகிறது. தொடர்பில்லாத பல கிராமங்களுடனும் முதலில் தொடர்பு கொள்ள அதிகாரிகள் முயலவேண்டும்.

"சென்ற புயலைவிட இதுமிகக் கடுமையாகவே இருந்திருக்கிறது. நிவாரண வேலைகளுக்குப் பல இலட்சம் ரூபாய் தேவைப்படலாம். பிற மாவட்டத் தோழர்களும், பிரமுகர்களும் உடனடியாகக் கவனம் செலுத்திப் பெருந்தொகை வசூலித்து, நிவாரண வேலைகளுக்கு உபயோகப்படுத்த வேண்டுகிறேன். சென்னை சர்க்கார் வேண்டிய உதவிகளைச் செய்ய மத்திய சர்க்காரை வற்புறுத்த வேண்டுகிறேன்."

—இவ்வாறு புயலால் பாதிக்கப்பட்ட தஞ்சை மாவட்டத்தின் பல பகுதிகளையும் சுற்றிப்பார்வையிட்ட தஞ்சை மாவட்டச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ தெரிவித்துக் கொள்கிறார்.

தி. மு. க. பொதுச்செயலாளர்

நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

★

டிச. 12, 13 தஞ்சை, திருச்சி, இராமநாதபுரம் ,மதுரை மாவட்டங்கள்

14 கோம்பை

15 நிலக்கோட்டை

16 கொழிஞ்சம்பாறை

17 குத்தாலம் (தஞ்சை)

எஸ்.ஆர்.எம்.யூ. லால்குடி கிளை உறுப்பினர்கட்கு

மேற்படி கிளையின் சாதாரண உறுப்பினர் கூட்டம் லால்குடி பெரிய செட்டித் தெரு, 42-ம் எண்ணுள்ள வீட்டு மாடியில், 14—12—55 மாலை 6 மணிக்கு நடைபெறும். அதுபோது, மத்திய சங்கத் தலைவர் எஸ். இராகவானந்தம் அவர்கள் 'எஸ்.ஆர்.எம்.யூ.-வும் தொழிலாளர்களும்' என்பது பற்றிப் பேசுவார்.

திருநெல்வேலியில்

'நம் நாடு' விற்பனையாளர்

★

கே. எஸ். புகாரி,
'மகிழ்ச்சி மன்றம்,'
தெற்கு மாட வீதி,
திருநெல்வேலி (டவுன்)

நெல்லை மாவட்ட தோழர்களுக்கு தி. மு. கழகத் வேண்டுகோள்

"தற்போது பெய்த மழையின் காரணமாய் மக்கள் அவதிப்படும் நிலை ஏற்பட்டால், எவரையும் எதிர்பாராது கழகத் தோழர்கள் வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டுகிறேன்; வீடு இழந்து, உணவுக்குத் திண்டாடும் நிலை மக்களுக்கு ஏற்பட்டால், வீடு வீடாகச் சென்று அரிசி வசூலித்து ஆவன செய்யுங்கள்; வெள்ளத்தினுல் வீடு நாசமாக்கப்பட்டால், கலெக்டர்களையோ, அல்லது தாசில்தாரரையோ பார்த்து நஷ்டஈடு கொடுக்கும்படி கேட்டு ஆவன செய்யுங்கள். தகவலை உடனுக்குடன் மாவட்டக் கழகத்திற்கும், தலைமை நிலையத்திற்கும் அனுப்பி வையுங்கள்,"

என்று, நெல்லை மாவட்ட தி. மு கழகச் செயலாளர் தோழர் கே. வி கே. சாமி, மாவட்டத்திலுள்ள கிளைகள் அனைத்திற்கும் சுற்றறிக்கை மூலம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

மீண்டும் 'கோரம்' இல்லா அகோரம்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டவண்ணம் துணைத் தலைவர் 'கோரம்' சேகரிக்க மணியடிக்கு மாறு கூறினார்.

உடனே உறுப்பினர்கள் சபைக்குள் வேகமாக நுழைந்தனர். நடவடிக்கைகள் சிறிது தாமதமாகத் துவங்கின.

நெல்லை மாவட்டத்தில் ஏற்பட்ட சேதம்

கே.வி.கே.சாமி, எம்.எஸ்.சிவசாமி தலைமையில் தி. மு. க. தோழர்கள் பணியாற்றுகின்றனர்

தூத்துக்குடி, டிச. 10—

"தற்போது பெய்த கடும் மழையின் காரணமாக, நெல்லை மாவட்டத்தில் தூத்துக்குடி, விளாத்திகுளம், எட்டயாபுரம் ஆகிய ஊர்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. அருகாமையில் உள்ள கண்மாய்கள் உடைந்ததே பெரு வெள்ளத்திற்குக் காரணம். தூத்துக்குடியின் பகுதிகளான டேவிஸ்புரம், மீனாட்சிபுரம், திரேஸ்புரம், போல்நாய்க்கன்பேட்டை ஆகிய இடங்கள் வெள்ளத்தில் மூழ்கிவிட்டன. இன்றுவரையிலும், டேவிஸ்புரம் 5 அடி தண்ணீருக்குள் இருக்கிறது. நூற்றுக்கணக்கான வீடுகள் இடிந்து நாசமாகிவிட்டன.

உயிர்ச் சேதம் இல்லையெனினும், ஏராளமான பொருள் சேதம் உண்டு ஆயிரக்கணக்கான மக்கள் வீடின்றித் தவிக்கின்றனர். தூத்துக்குடியிலும், அருகாமையிலும் உள்ள உப்பளங்கள் நாசமாகிவிட்டன; சுமார் ரூ 3 இலட்சம் பெறுமான உப்பு வெள்ளத்தோடு அடித்துக்கொண்டு போகப்பட்டது.

வெள்ளப் பெருக்கு செய்தியைக் கேட்டவுடன் நகர மன்றத் தலைவர் சாம் மாசிலாமணி, மாவட்டச் செயலாளர் கே. வி. கே. சாமி, குழந்தை, துணைத் தலைவர் சங்கரநாராயணன், சுந்தரம் ஆகியோர் நகர் முழுவதும் சுற்றி, தண்ணீரைப் போக்கத் தீவிர முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறார்கள். நகர மன்றப் பள்ளிகளுக்கெல்லாம் விடுமுறை அளித்துவிட்டு வீடில்லாதவர்கள் ஒதுங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நகர மன்றத்தின் வேலைகளை ஒதுக்கிவைத்துவிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஊழியம் செய்யும்படி தலைவர் உத்திரவிட்டிருக்கிறார்.

சப்கலெக்டர், போலீஸ் அதிகாரி, சாம் மாசிலாமணி, கே. வி. கே. சாமி, மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் அனைவரும் பகுதி பகுதியாக நின்று சேவை செய்து வருகிறார்கள்.

தி மு. கழகத் தோழர்கள் பகுதி பகுதியாக நின்று தகுந்த உதவி புரிந்து வருகிறார்கள். மில் வேலை செய்யும் தி. மு கழகத் தோழர்கள் 500 பேர்களுக்கு மேல் லீவு எடுத்து, ஊழியம் செய்து வருகிறார்கள். தோழர்கள் கே. வி. கே. சாமியும், எம். எஸ். சிவசாமியும் தலைமை தாங்கி நடத்துகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம் ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ